★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு
The EELANADU

Registered as a Newspaper at the G.P.O. in
Sri Lanka Under No QB/8945/78
மலர் 21 புரட்டாசி 24 ஜுல்ஹஜ் 17 இதழ் 240
யாழ்ப்பாணம் புதன்கிழமை 10.10.79

UNIVERSITY OF SRI LANKA RECEIVED 1979-10 PERIODICALS DIVISION LIBRARY

## ஒரு தாயின் வயிற்றில் காணப்பட்ட கத்திரிக்கோல்!

[மட்டுவில்]

பத்து மாதங்களாக வயிற்றில் வேதனைதாங்க முடியாது தவித்த பெண் ஒருவருக்கு ஆஸ்பத்திரியில் சத்திரசிகிச்சை செய்யப்பட்ட போது, பெண்ணின் வயிற்றில் வேதனை கொடுத்தது ஓர் ஐந்து அங்குல நீளமுள்ள கத்திரிக்கோல் இருப்பது தெரியவந்தது.

மட்டுவில் தெற்கைச் சேர்ந்த முன்னுள் கிராம சேவையாளர் ஒருவரின் மனைவியான திருமதி சேதுப்பிள்ளை செல்லத்துரை என்ற 48 வயதுப் பெண்ணின் வயிற்றிலேயே இக்கத்திரிக்கோல் கண்டெடுக்கப்பட்டது.

ஏழு பிள்ளைகளின் தாயாரான இவர் கடந்த பத்து மாதங்களாக, வயிற்றுநோ போன்ற பல்வேறு நோய்களால் கஷ்டப்பட்டுவந்தார் என்றும் இவர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு எடு

(6-ம் பக்கம் பார்க்க)

# குற்றவாளியின் ரிட்' மனுமீது தூக்கு இடைநிறுத்தப்பட்டது

## இந்திய சரித்திரத்தில் இதுவே முதல்தடவை

[துடில்லி]

**இந்திய தண்டனை முறைச் சட்டத்தில் வகைசெய்யப்பட்டுள்ள மரணதண்டனைகளும், மற்றும் அது சம்பந்தப்பட்ட அரசியல் சாசனமும் செல்லுபடியாகாது என்று சிறைச்சாலைக் குற்றவாளி ஒருவர் தாக்கல் செய்த மனுமீது, இந்திய உயர் நீதிமன்றத்தினால் ஏற்கனவே விதிக்கப்பட்ட சகல மரணதண்டனைகளும் நிறுத்தப்பட்டுள்ளன.**

இந்தியச் சரித்திரத்தில், ஒரு குற்றவாளியின் "ரிட்" மனு மீது, பாரதத்தில் ஏற்கனவே விதிக்கப்பட்ட மரண தண்டனைகள் இடைநிறுத்தப்படுவது இதுவே முதற்தடவை பல உயர் நீதிமன்றங்களில் என்பது குறிப்பிடத்தக்கது.

ஹரியானு சிறைச்சாலையைச் சேர்ந்த மல்சிங் எனும் தூக்குத்தண்டனை குற்றவாளி தமது தண்டனைக்கு எதிராக இந்திய உயர் நீதிமன்றத்தில் 'ரிட்' மனுவொன்றை தாக்கல் செய்தார்.

தமது மனுவில், இந்திய தண்டனை முறைச் சட்டத்தின்கீழ், மரணதண்டனை நிறைவேற்றப் படுவது ஒத்தி வைக்கப்பட வேண்டும் என்று கோரியிருந்தார்.

மல்சிங் ஏற்கனவே ஒரு குற்றவாளி. இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை எதிர்த்து அவர் இந்திய உயர் நீதிமன்றத்தில் "ரிட்"மனு தாக்கல் செய்திருந்தார்.

மேற்படி "ரிட்"மனு மீது இந்திய உயர் நீதிமன்றம் நேற்று அளித்த தீர்ப்பில் இந்தியாவில் ஏற்கனவே விதிக்கப்பட்ட சகல மரணதண்டனைகளும் நிறுத்தி வைக்கப்படுவதாகவும், மேற்படி குற்றவாளி தாக்கல் செய்த ரிட்'மனு மீது இம்மாதம் பதினேழாம் திகதி விசாரணை நடைபெறும் என்றும் தெரிவித்துள்ளது.

பருத்தித்துறை கொள்ளை:

## 4 இளைஞர்களும் சரணடைந்தனர்

[யாழ்ப்பாணம்]

பருத்தித்துறை இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற சம்பளப் பணக் கொள்ளை சம்பந்தமாகப் பொலிஸாரால் தேடப்பட்ட நான்கு இளைஞர்கள் நேற்றுப் பாதுகாப்புப்படையிடம் சரணடைந்தனர்.

கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் 21ந் திகதி பருத்தித்துறை இந்து மகளிர் கல்லூரி ஆசிரியர்களின் சம்பளப்பணத்தைத் துப்பாக்கி, வாள், கிறிஸ் கத்தி சகிதம் மேற்படி கல்லூரிக்குள் புகுந்த இளைஞர்கள் ஆயுதங்களைக் காட்டி, ஆசிரியர்களைப் பயமுறுத்தி, அங்கிருந்த 8,700 ரூபா சம்பளப் பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றனர்.

மேற்படி கொள்ளை சம்பந்தமாகப் பொலிஸாரால் தேடப்பட்டதாகக் கூறப்படும் இளைஞர்களான இவகுலசிங்கம், வசந்தராசா, அருள்தேவராசா, சரவணமுத்து ஆகிய நான்குபேரும் சட்டத்தரணி மூலம் யாழ் பாதுகாப்புப் படையிடம் சரணடைந்துள்ளனர். [கொ]

## 'ஜெயப்பிரகாஷ் நாராயண் ஒரு சரியான வழிகாட்டி'

### பிரதமர் 'பிரேமா' அனுதாபம்

[கொழும்பு]

இந்தியாவின் சிறந்த தலைவர்களில் ஒருவரான திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணின் மரணச் செய்தி கேட்டு இலங்கை ஆழ்ந்த துக்கம் கொள்கிறது. திரு நாராயணின் பணிகளின் தயக்கம் தாயகத்துடன் மட்டுப்படுத்தப்பட்டதாக இராது வெளிநாடுகளுக்கும் வியாபித்து மனித குலத்திற்கு குறிப்பாக ஏழைமக்களுக்கு ஒரு ஒளி விளக்காக திகழ்ந்தது.

இவ்வாறு இலங்கைப் பிரதமர் திரு. ஆர். பிரேமதாச இந்தியப் பிரதமர் திரு சரண்சிங்குக்கு திரு ஜெயப்பிரகாஷின் மறைவுகுறித்து அனுப்பியுள்ள அனுதாபச்செய்தியில் தெரிவித்துள்ளார்.

திரு. பிரேமதாசா தமது அனுதாபச்செய்தியில் மேலும் கூறியிருப்பதாவது:

"இக்கட்டான காலங்களில் 'எல்லாம் திரு. நாராயணின் சேவை மகத்தானதாக இருந்தது. நெருக்கடியான காலகட்டங்களில் அவர் மக்களுக்கு சரியான வழிகாட்டியாகத் திகழ்ந்தார். அன்னாரை இழந்து தவிக்கும் இந்திய மக்களின் துயரில் இலங்கை மக்களும் பங்கு கொள்கிறார்கள்." (இ)

நகைக்கடை கொள்ளை:

## சந்தேக நபர் ஒருவர் அடையாளம் காட்டப்பட்டார்

[யாழ்ப்பாணம்]

யாழ் கே. கே. எஸ். வீதி நகைக்கடைக் கொள்ளை தொடர்பாக நடந்த அடையாள அணிவகுப்பில், சந்தேகநபர்களில் ஒருவரான செ கருணாகரன் அடையாளம்

(6-ம் பக்கம் பார்க்க)

சென். பற்றிக்ஸ் கல்லூரி பழைய மாணவர் சங்க ஆதரவில் (S P. C. கட்டிட நிதிக்காக)
தென் இந்திய திரைப்பட நகைச்சுவை ஜோடிகளான
கே. ஏ. தங்கவேலு—எம். சரோஜா
குழுவினர் அளிக்கும்
"சப்தஸ்வரங்கம்"
இடம்: சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானம்
காலம்: 15-10-79 மாலை 7 மணி
டிக்கட்டுகள்: ரூ.50, ரூ 25 ரூ 15, ரூ 10, ரூ 5
டிக்கட்டுகள் முன்கூட்டியே பெறும் இடங்கள்:
1. பிலிப்ஸ் பேஷன்ஹவுஸ்—பிரதானவீதி, யாழ்ப்பாணம்
2 J E திருச்செல்வம் — திருச்செல்வம் அன் கோ ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.
3. நீச்கோப்பியார் — நவீனசந்தை, யாழ்ப்பாணம்.
4. S P C; O. B. A —59, செயின் பற்றிக்ஸ்வீதி, யாழ்ப்பாணம்.
5 டியூலிப்ஸ் — பிரதானவீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி தொடர்புகள் 7251, 561
3792

இன்று தொடக்கம் யாழ். நகரில்
"எட்டு மகத்தான இரவுகள்"
யாவரும் கண்டுகளிக்கத் தவறாதீர்கள்
யாழ். திறந்த வெளியரங்கில்
ஒக்டோபர் 10-ந் திகதி முதல் 17-ந் திகதி வரை தினசரி மாலை 6 மணிக்கு
வாழ்வில் விமோசனம் பெற ஓர் அரும் பெரும் தருணம்
விசேட பேச்சாளர்.
வண. ஹெரல்ட் டேவிஸ்
மீண்டும் வருகின்றனர் யாழ் நகரை பரவசத்திலாழ்த்திய மெல்லிசை மன்னர்கள்
"மை பிறதர்ஸ் கீப்பர்"
அனைவரும் வருக! பிரவேசம் இலவசம்!!
8808

# வரி விளம்பரம்

## தேவை

யாழ் நகரிலுள்ள அலுமினியம் தொழிற்சாலைக்கு கீழ்க்காணும்பணியாட்கள் தேவை. அச்சிலனர்கள் பொலிஷர்கள், எமறி அடிப்பவர்கள் அனுபவமுடையோர கீழ்க்காணும் விலாசத்திற்குச் சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும். உரிமையாளர், மொடர்ன் இன்டஸ்றீஸ், 70, கோவில் லேன், A. P. லேன், யாழ்ப்பாணம். 3777

யாழ். நகரில் பிரபல்யமான நகைச் சேர்விஸ் ஸ்தாபனத்திற்கு நல்ல ஆங்கில அறிவுடைய பெண் லிகிதர் தேவை விண்ணப்ப முகவரி:- விளம்பர இல. 3784, C/o, ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 3784

புதிய அல்லது நல்ல நிலையிலுள்ள ஐஸ் கிறீம் தயாரிக்கும் இயந்திரமும், Deep-freezer Bottle cooler உடனடியாகத் தேவை கடிதமூலம் அல்லது நேரில் தொடர்புகொள்ளவும். நிதி கொமின்ஸ் கோட்டல், 35 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 3783

## விற்பனைக்கு

சிங்கப்பூர் பார்மஸி லிமிட்டெட் ஸ்தாபனத்திற்கு மருந்து விற்பனை உதவியாளர்கள் தேவை உடன் எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். மூன்று மைல் சுற்றளவுக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது 3780

## தேவை

குளிர் பானங்கள், பலகாரங்கள் தயாரிக்க ஒருவரும், ரொட்டி தயாரிக்க இன்னொருவரும் உடனே தேவை விபரங்கட்கு நேரிற்சந்திக்கவும். ஓவகிஸ் கூல்பார் & கபே ஜெயா பில்டிங், கண்டி வீதி, அரியாலை. 3794

## யாழ். ஆயருக்கு முறையீடு

(பண்டத்தரிப்பு)

இளவாலை ஆர். சி. ஆலயமொன்றின் தேவாலயத்தில் மீண்டும் சாதிப் பாகுபாடுகள் காண்பிக்கப்பட்டு வருவதாகவும், இதையிட்டு நடவடிக்கை மேற்கொண்டு சமத்துவ நிலையை ஏற்படுத்தித்தருமாறும் இளவாலை மக்களில் கிராமத்தைச் சேர்ந்த சிறுபான்மைத் தமிழர்கள் கையொப்பமிட்டு, யாழ். மேற்றிராணியாருக்கு அனுப்பி

(4-ம் பக்கம் பார்க்க)

## டீசல் என்ஜின்கள்


தகுதிவாய்ந்த வாகன என்ஜின் பரிசோதகரால் தருவிக்கப்பட்டவை.

பின்வரும் டீசல் என்ஜின்களுக்கான ஓடர்கள் 28-10-79 வரை எங்கள் ஸ்தாபனத்தால் ஏற்றுக்கொள்ளப்படும்.

| (C & F) திர்வை நீக்கலான | விலை |
|---|---|
| L. D. S. | 7,600-00 |
| L. D. 2 | 7,000-00 |
| B. M. C. 3½ TON 4 சிலிண்டர் | 8,500-00 |
| A/60 டீசல் | 7,500-00 |
| PERKINS 4 சிலிண்டர் | 8,250-00 |
| ,, V W 12 V 1300 | 7,200-00 |
| ,, V W. 6 V. 1200 பெற்றோல் | 6,000-00 |
| ,, MAINER | 6,000-00 |
| B. M. C. 6 சிலிண்டர் | 9,000-00 |
| JSUZU 6 சிலிண்டர் | 16,000-00 |
| LEYLAND 6 சிலிண்டர் | 14,500-00 |
| PERKINS 6 சிலிண்டர் | 10,000-00 |

மற்றும் (BOAT) என்ஜின்களுக்கும் ஏனைய என்ஜின்களுக்கும் ஓடர்கள் உடன் எடுக்கப்படும். தொடர்புகொள்ளவும்.

**A. V. M. அன் கோ,**
167, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.
3778



## Man-Making Academy

210, RAMANATHAN ROAD,
THIRUNELVELY.
(Opposite University of Jaffna)

PRESENTS THE FOLLOWING COURSES

- UNIVERSITY ENGLISH
- SPOKEN ENGLISH
- ENGLISH FOR SCIENCE AND TECHNOLOGY

&

**Man-Making Course**- A Course of Learning Technics for Higher Studies.

"Educational growth is not the accumulation of more and more pieces of information but the development of an increasingly complex structure for organising and inter-relating ideas "

"If you have a knowledge of English plus the ways of gathering and recording knowledge in the mind you will meet with success in every of your endeavours "

CLASSES COMMENCING ON 15-10-79

Consulting Hours: 9-30 to 11 a m & 3 to 5-30 p m.
3789

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் மணிக்கூட்டுக்கோபுரம் திருத்த வேலைக்கான கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாண மாநகர மணிக்கூட்டுக்கோபுரம் திருத்துவதற்கான கேள்விகள் 30-10-79ம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12-00 மணிவரை மாநகராட்சி மன்ற ஆணையாளரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விகள் மாநகர மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும் படிவங்களில் இருபிரதிகளில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

கேள்விப்படிவங்கள் கேள்வி வைப்பாக ரூ 100/-ம், கேள்விப்படிவக்கட்டணமாக ரூ 25/-ம் செலுத்தியதின் பேரில் 22-10-79ம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12 மணி வரை வழங்கப்படும்.

மேலதிக விபரங்களை மாநகர மராமத்துப் பொறியியலாளரிடம் விண்ணப்பிப்பதின் பேரில் பெற்றுக்கொள்ளலாம்.

க. சிவஞானம்,
மாநகராட்சிமன்ற,
ஆணையாளர்.

மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம். 8-10-79
3798

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

சண்டிலிப்பாய் வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற பரமானந்தம் பெண் டரமேஸ்வரி என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தினதும் உடைமைப் பொருள்களினதும் விடயத்தில்.

— மரணமெய்தியவர்.

மரணசாதன நியாயாதிக்கம்: இல. டீ./47

இராசையா பரமானந்தம் சண்டிலிப்பாய் வடக்கு சண்டிலிப்பாய்

மனுதார்

எதிராக

1. ப. விஜயகுமார் சண்டிலிப்பாய் வடக்கு சண்டிலிப்பாய்
2. ப சிவகுமாரன் சண்டிலிப்பாய் வடக்கு சண்டிலிப்பாய்
3. ப. சுமங்கலா (பராயமற்றவர்) சண்டிலிப்பாய் வடக்கு சண்டிலிப்பாய்.
4. ப. வதீசன் (பராயமற்றவர்) சண்டிலிப்பாய் வடக்கு சண்டிலிப்பாய்.

3ம் 4ம் பராயமற்றவர்கள் தமிழ் கட்டு வழக்குப் பாதுகாவலர்களாக

5. சபாபதி இராசிங்கம்
6. பரமானந்தம் விஜயகுமார் அவர்கள்

எல்லோரும் சண்டிலிப்பாய் வடக்கு சண்டிலிப்பாய்.

எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கு இணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது

அக்கறையுள்ள ஆள் எவரும் 1979ம் ஆண்டு கார்த்திகை மாதம் 30ம் திகதியாகிய அந்நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்

1979ம் ஆண்டு ஆவணி மாதம் 28ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி,
மு. நல்லலிங்கம்
பதிவாளர்,

தாக்கல் செய்தவர்
இ. சிவரத்தினம்
மனுதாரின் சட்டத்தரணி
3786

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம், சென்ற் பற்றிக்ஸ் வீதியைச் சேர்ந்த காலஞ்சென்ற அந்தோனி விக்டர் மனுவேல்பிள்ளை என்பவரின் மரணசாதனத்தின் சொத்தின் விடயத்தில்,

மரணமெய்தியவர்

யாழ்ப்பாணம் சென்ற் பற்றிக்ஸ் வீதி அ. வி. மனுவேல்பிள்ளை மைக் பெண் விரெக்லா.

மனுதார்.

மரணசாதன நியாயாதிக்கம் இல. 3448

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர்குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது

அக்கறையுள்ள ஆள் எவரும் 1979ம் ஆண்டு ஐப்பசி மாதம் 12ஆந் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக்கட்டளைப்படி
பொ. பாக்கியநாதன்
பதிவாளர்

1979ம் ஆண்டு ஆடிமாதம் 24ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.
3797

# அறிவித்தல்

தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கீழ்க்காணும் பொருட்கள் கேள்விப் பத்திர மூலம் விற்பனைக்குண்டு

1. வெற்றுச் சாக்குகள் 6800க்கு மேற்பட்டவை
2. கழிவு மா
3. கழிவு சீனி
4. பாவித்த வெற்றுப் பரல்கள்45கலன்-60க்கு மேற்பட்டவை.

வெற்றுச்சாக்குகளுக்கு ரூபா 250/-ம் மற்றும்பொருட்களுக்கு ரூபா 25/-ம் தலைமைக்காரியாலயத்தில் செலுத்தி கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளவும் கேள்விப்பத்திரங்கள் 19-10-79-ந் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு முன்னர் பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கவும் தபால் உறையின் இடதுபக்கத்தில் வெற்றுச் சாக்கு/கழிவுப் பொருட்கள் எனக் குறிப்பிடல் வேண்டும். கேள்விப்பத்திரம் 19-10-79-ந் திகதி வெள்ளிக்கிழமை 4 மணிக்கு சங்க உபசபையினரின் முன்னிலையில் திறக்கப்படும்.

பொது முகாமையாளர்
தெல்லிப்பழை
ப. நோ, கூ. சங்கம்,
8-10-1979. (3793)

(மன்னார்)

பேசாலையில் கருவாட்டு விலை வீழ்ச்சியடைந்துள்ளது. இதனால் கருவாடு உற்பத்தி செய்யும் தொழிலாளர்கள் மிகவும் பீதியடைந்துள்ளார்கள் இதேசமயம் அரிசி விலை உயர்வடைந்துள்ளது. [அ]

## சுன்னாகம் பட்டணசபை

# கேள்விப் பத்திர அறிவித்தல் 1980

சுன்னாகம் மீன்சந்தையில் 01-01-1980 தொடக்கம் 31-12-1980 வரையிலான காலப்பகுதியில் கீழ்க்காணும் குத்தகைகளுக்கான கேள்விகள் 1979-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 24-ந் திகதி புதன்கிழமை முற்பகல் 10-00 மணி வரையும் விசேட ஆணையாளரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரம் கீழ்க்குறிப்பிடப்படும் விபரங்களின்படி பிணைப்பணமும், கேள்விப்பத்திரப் பணமும் செலுத்தி 23-10-1979-ந் திகதி செவ்வாய்க்கிழமை பகல் 12-15 மணி வரையும் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரப் பணம் மீளளிக்கப்படமாட்டாது. மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

| கடை இல. | வியாபாரத்தின் தன்மை | பிணைப் பணம் | கேள்விப் பத்திரப் பணம் |
|---|---|---|---|
| மீ. 1 | மாட்டிறைச்சிக்கடை | 300/- | 25/- |
| மீ 2 | ஆட்டிறைச்சிக்கடை | 200/- | 15/- |
| மீ 3 | கருவாட்டுக்கடை | 100/- | 10/- |
| மீ. 4 | கருவாட்டுக்கடை | 100/- | 10/- |
| மீ 5 | கருவாட்டுக்கடை | 100/- | 10/- |
| மீ. 6 | கருவாட்டுக்கடை | 100/- | 10/ |
| மீ 7 | கருவாட்டுக்கடை உமல், கடதாசி ஆகியன விற்பனை செய்தல் | 100/- | 10/- |
| | | 100/ | 10/- |

பொ. பாலசிங்கம்,
விசேட ஆணையாளர்,
சுன்னாகம் பட்டணம்

பட்டணசபை அலுவலகம்,
சுன்னாகம்,
04-10-79.
3796

## G. C. E. [A/L] 1980 April

புதிய வகுப்பு ஆரம்பம் (13-10-79) சனிக்கிழமை

**திண்மக் கேத்திரகணிதம்**
(SOLIT GEOMETRY)

ஆசிரியர் :- M இராஜதேவன் B. Sc. (Maths Special)

நேரசூசிகை :- சனிக்கிழமைகளில் காலை 8-30 — 9-30 மணிவரை நடைபெறும்

**யாழ்ப்பாண ரியூற்றோரியல் கல்லூரி [ J. T. C. ]**
JAFFNA TUTORIAL COLLEGE
"தேவன் முத்து மாளிகை"
219/1, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
[யாழ்.—காரைநகர் பஸ்தரிப்பிற்கு முன்பாக] 3799

**கடந்தவாரம் சபையில்...... (2)**

# சொற்போர் - கோஷங்கள் - குறுக்கீடுகள் நிறைந்த நீண்ட விவாதம்

## இந்திரா, தேசாயின் ஆட்சி பற்றியும் பிரஸ்தாபம்

-- நமது பாராளுமன்ற நிருபர் சு. மகாலிங்கசிவம் --

நள்ளிரவுக்குப் பின்னர் சபையினுள் சிலரை தூக்கம் விரட்டிக்கொண்டிருந்த போதிலும் பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், அமைச்சர் தொண்டமான், திருமதி சிறிமாவோ, திரு. சிவசிதம்பரம் ஆகியோர் உட்பட பலர் முழு இரவும் விழித்தவண்ணம் முழுநேரமும் சபையினுள்ளே அமர்ந்திருந்தனர்.

### பெரும் சொற்போர்

பெருமளவு நேரம் நுவரெலியா-மஸ்கெலியா தொகுதி உறுப்பினர்களான அமைச்சர்கள் காமினி திசநாயக்கா, தொண்டமான் ஆகியோருக்கும் திரு. அநுரா பண்டாரநாயக்காவுக்குமிடையே மிகக் கடுமையான சொற்போர் மூண்டு கொண்டிருந்தது. மூவரும் பலத்த வாக்குவாதத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

திரு அநுரா பண்டாரநாயக்கா பேசிக்கொண்டிருந்த போது வாக்குவாதம் ஏற்படவும் அப்போது சபைக்குத் தலைமை தாங்கிக்கொண்டிருந்த குழுக்களின் பிரதித் தலைவர் திரு. எட்மண் சமரவிக்கிரம, திரு. அநுராவைக் குறிப்பிட்டு, "உறுப்பினர் என்னைப் பார்த்து பேசுங்கள்" - என்றார். உடனே திரு. அநுரா—

"மன்னிக்கவேண்டும் தலைவர் அவர்களே. நீங்கள் அங்கு இருப்பதை நான் மறந்துவிட்டேன்" என்று வெகு அநாயசமாகவே கூறவும் சபையில் நீண்ட சிரிப்பொலி எழுந்தது.

திரு அநுரா பண்டாரநாயக்கா தன்னுடைய பேச்சுக்கு பல ஆதாரங்களுடன் வந்திருந்தார்.

அரசாங்கம் மக்களுக்களித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாததன் விளைவாகவே இச் சட்டமூலத்தை அரசு கொண்டுவருகிறதென்று குற்றம் சுமத்திய அநுரா, அவசரகாலச்சட்டத்தின் கீழ் ஆட்சி நடத்தியதால்தான் எம்முடைய 92 ஆசனங்கள் கடந்த தேர்தலில் 8 ஆகின என்பதை நாம் ஒப்புக்கொள்கிறோம். ஆனால் அதே அவசரகால ஆட்சியையே இத்தனை சட்டங்களின்மூலம் இந்த அரசும் நடத்த ஏன் முயல்கிறது? என்று கேட்டார்.

### இந்த அரசின் 5வது அடக்குமுறைச்சட்டம்

— இந்த அரசாங்கத்தின் அடக்குமுறைச் சட்டங்கள் வரிசையில் இது ஐந்தாவது என்றும் சொன்னார் அவர்.

### அனுரா - காமினி வாக்குவாதம்

திரு அநுரா: மகாவலி அபிவிருத்தித்திட்டம் 1993க்கூட முடியாது. 1983ல் ஒரு திட்டத்தைத்தானும் முடிக்கமுடியாது என்று நிபுணர்கள் குழு அரசுக்கு அறிக்கை சமர்ப்பித்திருப்பது தமக்கு தெரியும் என்று கூறவும் அவருக்கும் மகாவலி அபிவிருத்தி அமைச்சர் காமினி திசநாயக்காவுக்குமிடையே காரசாரமான வாக்குவாதம் ஆரம்பமானது.

- தன்னுடைய கூற்றை நிரூபிக்க தம்மால் முடியுமென்றார் அனுரா.

அறிக்கை என்னிடமிருக்கிறதென்றால் அதை உம்மால் எப்படி நிரூபிக்கமுடியும்? என்றார் அமைச்சர்.

அந்த அறிக்கையின் 47வது பக்கத்தில் 18வது வரிசையில் இது கூற பட்டிருக்கிறது என்றார் அநுரா

அப்படி ஓர் அறிக்கையே இல்லை என்றார் காமினி.

"உம்மிடம் அது இருக்கிறது" என்று கூறி, அநுராவுக்கு துணை சேர்த்துக்கொண்டார் ஹரிஸ்பத்துவ 2வது உறுப்பினர் திரு. விஜயசிறி

விக்டோரியா திட்டம் 1986லும் மாதுறுஓயாத்திட்டம் 1989லும் முடியுமென்றும் 1983ல் எந்தத் திட்டமுமே முடிவடையமாட்டாது என்றும் அந்த அறிக்கையில் தெரிவித்திருப்பதாக கூறினார்.

### இந்திரா - மொரார்ஜி

திருமதி இந்திராகாந்தி, மொரார்ஜி தேசாய் ஆகியோரையும் அந்த நள்ளிரவுவேளை சபைக்கு அழைத்தார்கள்.

### பிரதமரும் குறுக்கிட்டார்

அமைச்சர் காமினி திசநாயக்கா பேசிக்கொண்டிருக்கையில் ஒரு கட்டத்தில் திரு. அநுரா குறிக்கிடவும் அப்போது பிரதமர் எழுந்து—

இந்திரா பிரதமராக இருந்த வேளை அல்லது சக்கரவர்த்தினியாகிருந்தபோது என்ன அவரது செயல்களை நாம் கண்டிப்போம்; நல்லவற்றை ஆதரிப்போம். உம்முடைய அம்மாவும் பிரதமராகவிருந்தார். அவரையும் நாம் கண்டித்தோம் என்று கடுமையான தொனியில் கூறினார்.

நல்லூர் உறுப்பினர் திரு. சிவசிதம்பரம், இத்தகைய சட்டங்கள் ஆட்சியாளரை அவர்களின் இறுதிக்கட்டத்திற்குத்தான் அழைத்துச் செல்லும். இந்தியாவில் மொரார்ஜி தேசாய் இதைத்தான் செய்தார், அவரின் ஆட்சி அஸ்தமித்தது. இதைத்தான் நான் இந்த அரசுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்" என்றார்.

## 'தமிழ்ஈழ அமைச்சரவையில் தர்மருக்கு பொதுசன பாதுகாப்பு அமைச்சைக் கொடுக்காதீர்'

மானிப்பாய் உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம் உரையாற்றிக் கொண்டிருந்தபோது அந்த அதிகாலை வேளையில் சபை உற்சாகமடைந்து காணப்பட்டது.

### 'தர்மர்' பேச்சிலும் குறுக்கீடுகள்

— பிரதமர் உட்பட பல உறுப்பினர்கள் அவரின் பேச்சினிடையே முழுநேரமும் குறுக்கிட்டுக் கொண்டிருந்தார்கள். ஆனாலும், தமிழிலே ஆரம்பித்த தன்னுடைய பேச்சை இவர்களின் குறுக்கீட்டால், அவர்களுக்கு பதிலளிக்கும் வகையில் ஆங்கிலத்தில் மாற்றிக்கொண்டாரே தவிர தன்னுடைய கருத்துக்களைத் தெரிவிப்பதில் அவர் தவறிவிடவில்லை. வழக்கமான சிரிப்புடனேயே முழுநேரமும் பேசினார்.

### ஏனிந்த அவசரம்?

இந்த அத்தியாவசிய சேவைகள் சட்டமூலத்தை இரவோடிரவாக விவாதித்து நிறைவேற்றிவிடுவதற்கு அத்தியாவசியமான காரணம் என்ன? என்பதை எந்த ஓர் அமைச்சரும் இதுவரை கூறவில்லை என்று குற்றஞ்சுமத்திய அவர், நாளையோ அல்லது மறுதினமோ ஏதாவது வேலைநிறுத்தங்களோ அல்லது அரசைக் கவிழ்க்கும் நடவடிக்கைகளோ நடைபெறவிருக்கின்றனவா? என்று கேட்டார்.

தொழிற்சங்க இயக்கத்தின் தந்தையாக விளங்கிய திரு ஏ. ஈ. குணசிங்கவின் சிஷ்யரான பிரதமர், இச்சட்டமூலத்தை கொண்டுவருவதில் தாம் சந்தோஷமடைவதாக எப்படிக்கூறமுடியும்? என்று தர்மர் கேட்க, உடனே பிரதமர் எழுந்து, "மிச்சம் சந்தோஷம்"—என்றார் தமிழில்!

"சந்தோஷமிருக்க முடியாது"—என்றார் தர்மர்.

## "அடக்குமுறைச் சட்ட வரிசையில் இது 5-வது"

ஏ. ஈ. குணசிங்காவின் சிஷ்யராகவிருந்த பிரதமர், கூடாத கூட்டத்தோடு— ஐ. தே. க. வில் சேர்ந்துவிட்டதால்தான் இப்போதுதான் சந்தோஷமடைகிறேன் என்று கூறுகிறார் என்றார் அவர்.

திரு. தர்மலிங்கம் பேசிக்கொண்டிருந்த ஒருகட்டத்தில் அமைச்சர் காமினி திசநாயக்கா குறுக்கிட்டு—

### தமிழ்ஈழ மந்திரி சபையில்...

"நான் எதிர்க்கட்சித் தலைவருக்கு ஓர் ஆலோசனை கூற விரும்புகிறேன்; தயவுசெய்து உங்கள் தமிழ்ஈழ மந்திரிசபையில் மானிப்பாய் உறுப்பினரை மாத்திரம் பொதுசன பாதுகாப்பு அமைச்சராக நியமித்துவிடாதீர்கள்" என்றார்.

அப்போது—

"அவர் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்"—என்றார் நல்லூர் சிவசிதம்பரம்.

இந்த சட்டமூலம்பற்றி ஐ. தே. க., இ. தொ. கா. தொழிற்சங்கங்களிடையே மாத்திரம் வாக்கெடுப்பை நடத்தி அவர்கள் ஏற்றுக்கொண்டார்களென்றால் நாமும் ஏற்றுக்கொள்கிறோம் என்று திரு தர்மலிங்கம் கூறிய கட்டத்தில் அமைச்சர் நிஸங்க விஜயரத்தின எழுந்து—

### வெள்ளவத்தை தமிழர்களிடம்...,

"அது தமிழ்ஈழம்பற்றி வெள்ளவத்தை தமிழர்களிடம் வாக்கெடுப்பு நிகழ்த்துவதுபோலாகும்!"—என்றார்.

### பிரதமருக்கு வெளிநாடுகள் கடிதங்கள்

தன்னுடைய பேச்சில், உங்களின் இந்த நடவடிக்கையை உலகம்முழுவதுமான தொழிற்சங்கங்கள் எதிர்க்கின்றன என்று கூறிய திரு. தர்மலிங்கம் இதுபற்றி சுவீடன், ஜப்பான் ஆகிய நாடுகளின் தொழிற்சங்கங்கள் இலங்கைப் பிரதமருக்கு பகிரங்கக் கடிதங்களை அனுப்பிவைத்துள்ளன என்றுகூறி அவற்றை சபையில் வாசித்தார்.

அப்போது பிரதமர் திரு. பிரேமதாச இதுபற்றி இப்போது தான் முதன்முதலாக கேள்விப்படுவதாக கூறினார்.

அதிகாலைப்பொழுதில்— கனகாத்திரத்தோடு திரு. சிவசிதம்பரம் கூட்டணி சார்பில் விவாதத்தை முடித்து வாதிட்டார்.

முன்னர் பீக்கிங் சார்பு கம்யூனிஸ்டாகவிருந்தபோது 'பாராளுமன்றம் திருடர்கள் குகை' என்று ஒரு தடவை கூறிய கம்பஹா உறுப்பினர் திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா—இப்போது சுதந்திரக்கட்சி எம். பி.யாக இருந்துகொண்டு கடந்த செவ்வாய்க்கிழமை கூறிய சில வார்த்தைகளும் சபையில் பெரும் சர்ச்சையையும் அமளியையும் ஏற்படுத்தின.

எதையும் பேசலாம் என்ற உரிமையை வைத்துக்கொண்டு இச்சபையில் பொய்யானவற்றைப் பேசுகிறார்களென்றும் இச்சபை உறுப்பினர்கள் வாங்கிய லஞ்சம்பற்றி விசாரிக்க ஜனாதிபதி கமிஷன் ஒன்றை நியமிக்கவிருப்பதாக பத்திரிகையில் செய்திவந்திருக்கிறதென்றும் அவர் கூறியவையே சபையில் சர்ச்சை கிளப்பின.

### பின்வரிசை உறுப்பினர்கள் கோஷம்

உறுப்பினர் இவற்றை வாபஸ்பெறவேண்டும் என்று அரசாங்க பின்வரிசை உறுப்பினர்கள் எழுந்துநின்று கோஷமிட்டனர். அதிகாலை 3 மணிக்கு சபையில் இந்த அமளி நடைபெற்றுக்கொண்டிருந்தது.

திரு. பண்டாரநாயக்கா தன்னுடைய பேச்சின் இறுதியில் சில கோரிக்கைகளை அரசுக்கு விடுத்தார்.

0 சகல தொழிலாளருக்கும் குறைந்தது ரூபா 1000 சம்பளம் வழங்கப்படவேண்டும்

0 புசலுக்கு ரூபா 140 வீதம் நெல்லுக்கு உத்தரவாதவிலை வழங்க வேண்டும்.

ரூபா 1000க்கு குறைந்த வருமானமுள்ளசகலருக்கும் உணவு முத்திரை வழங்கப்படவேண்டும்.

0 கிராமப்புறச் சிறுவர்கள் படிப்பதற்கு வசதியாக 2 கலன் மண்ணெண்ணெய் குடும்பமொன்றுக்கு இலவசமாக வழங்க வேண்டும்.

—இவை கம்பஹா உறுப்பினரின் கோரிக்கைகள்

நகைச்சுவையோடு தாக்குவதில் வல்லவரான ஹரிஸ்பத்துவ 2வது உறுப்பினர் திரு ஆர். பி விஜயசிறி எதிர்க்கட்சிகளின் சார்பில் விவாதத்தை முடித்துப் பேசினார்.

அரசாங்கதரப்பில் இந்த விவாதத்தில் முற்றிலும் அமைச்சர்களே கலந்துகொண்டார்கள்.

பிரதமர் தனது பதிலுரையில், சகலரும் ஒன்றுசேர்ந்து காலிக்கு வாருங்கள், நாம் மக்களை ஒரே ஒரு கேள்விதான் கேட்டோம்; அதாவது ஒரு விதத்திலாவது உங்கள் வாழ்க்கை வசதி அதிகரிக்கவில்லையா?

—இந்த ஒரு கேள்வியைத்தான் நாம் கேட்டோம் என்றார்.

—சரியாக புதன்கிழமை காலை 5-30 மணிக்கு சட்டமூலம் 107 அதிகப்படியான வாக்குகளுடன் நிறைவேறியது. எதிர்க்கட்சிகள் இரண்டும் எதிர்த்து வாக்களித்தன.

அதன்பின்னர், இன்று கடைசிநாள் என்பதால் யாழ் நிருவாக மாவட்டம், கட்டுநாயக்கா விமானநிலையப் பிரதேசம் ஆகிய இடங்களிலான

[5-ம் பக்கம் பார்க்க]

**மக்கள் கருத்து**

### தபால் பெட்டி அமைத்து உதவுக

நல்லூர் இராமலிங்கம் வீதி முடமாவடியில் நிரந்தரமாகப் பொருத்தப்பட்டிருந்த தபால் பெட்டி அகற்றப்பட்டு ஆறு மாதங்களாகின்றன. இதனால் இச்சுற்றுடலில் உள்ளவர்கள் தபால் போடுவதில் மிகவும் கஷ்டமடைகின்றார்கள். ஆகவே இதற்குப்பொறுப்பாகவுள்ள அதிகாரி அவர்கள் தமது கவனத்திற்கு எடுத்து விரைவில் தபால்பெட்டி ஒன்று நிரந்தரமான இடத்தில் பொருத்தி தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அத்துடன் இப்பெட்டியை இராமலிங்கம் வீதி, சட்டநாதர் வீதி, கோவில் வீதி, ஆகிய இம்மூன்று வீதிகளும் சந்திக்கும் முடமாவடிச் சந்திக்கு அண்மையில் நிரந்தரமாக அமைப்பது சகலருக்கும் வசதியாகவிருக்கும்.

வே. சிவராமலிங்கம்
நா. செல்வஞானம்
சு. கிருபாகரன்
கந்தன் படிப்பகம்,
இராமலிங்கம் வீதி
நல்லூர்.

∴ ∴ ∴

### அதிகாரிகள் கவனிப்பார்களா?

மேற்கத்திய நாடுகளில் அந்நாட்டு வைத்திய நிபுணர்கள் எஞ்சினியர்கள் ஆகியோர் வெளிநாடு செல்வதால்தான் அந்நாடுகள் வெளிநாட்டுச் செலாவணியைச் சம்பாதிக்கின்றன ஆனால் இலங்கை ஏழைப்படிப்பறிவற்ற தொழிலாள வர்க்கத்தின்மூலம் எவ்வளவோ கோடிக்கணக்கான வெளிநாட்டு செலாவணியைச் சம்பாதிக்கிறது. ஆனால் இவ்வளவு செலாவணியை சம்பாதிக்கும் இம்மக்களை அரசாங்கம் பல இன்னல்களின் பின்னரே அவர்களை வெளிநாடுகளுக்குச் செல்ல அனுமதிக்கிறது.

அவர்கள் பாஸ்போட் எடுக்கப்போனால் கிழமைக்கணக்காக குடியரசு குடியகல்வுத் திணைக்களத்தில் சுற்றித்திரியவேண்டும். அதற்குப் பிணை நிற்பதற்கு ஆளைத்தேடித் திரியவேண்டும். பல ரூபாய்களைச் செலுத்தித்தான் அவர்கள் அதனைப் பிடிக்கவேண்டும். இந்த முறைகளை ஒழித்து உதவி அரசாங்க அதிபர்களின் சிபார்சின் கீழ் அவர்கள் பாஸ்போர்ட் பெற அனுமதிக்க வேண்டும் இது தொடர்பாக அதிகாரிகள் கவனிப்பார்களா?

—இறிஸ்ரி
இரத்தினசிங்கம்
கரம்பன்.

**வின்ஸர்** தினசரி 10-30, பி.ப.2-30, 6-30, 9-30
யாழ்ப்பாணம்
ஜெய்சங்கர்-விஜயலக்ஷ்மி நடித்த
**வல்லவன் ஒருவன்**
(புதிய பிரதி)

**நாகம்ஸ்** (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி,ஞாயிறு 2-30
ஜெமினி-சாவித்திரி
**காத்திருந்த கண்கள்**

**ராஜா** தினசரி 4 காட்சிகள்
யாழ். நகர்
எம். ஜி. ஆர். - பத்மினி நடித்த
**அரசிளங்குமரி**
(புதிய பிரதி)

**வெஸ்லி** (காங்கேசன்துறை)
தினசரி 6-30, 9-30
சனி-ஞாயிறு 2-30
**அன்புக்கரங்கள்**

**REGAL** (Jaffna)
Daily at 2-00 4-30, 7-00 & 9-30p. m. only
Karakatowa East Of Java
From: 11-10-79
FOR BETE'S SAKE

**RIO** Jaffna Phone: 7607
Daily 10-30 a.m. 4-45, 7-00 & 9-30 p.m.
One Chance In A Thousand
(Spy-Thriller)

# ஸ்ரீதர் (யாழ்நகர்)

காட்சிகள் முன்கூட்டியே ஆரம்பிக்கவேண்டியிருப்பதால் காட்சிநேரங்கள்குறிப்பிடமுடியாமைக்கு மன்னிக்கவும்.

எவரெஸ்ட் நடிகனின் இமாலய வசூல் சித்திரம்.
சிறந்த படங்களை தயாரித்து வழங்கிய சுஜாதாவின் மாபெரும் தயாரிப்பு
நடிகர் திலகம் நடிப்புச்செல்வி
★ சிவாஜி கணேசன் ★ சுஜாதா
அறிமுகம் விஜயகுமார், சங்கீதா, நாகேஷ், சத்தியப்பிரியா, ராமதாஸ், மனோரமா, சுந்தரராஜன், சுருளிராஜன், சச்சு இன்னும் பலர் நடித்திருக்கிறார்கள்.
இசை: இளையராஜா வெள்ளிவிழாச் சித்திரம்

**தீபம்**
[வர்ணக் கலர்]

# மனோஹரா A யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
★ சிவாஜிகணேசன் ★ சுஜாதா
சந்திரமோகன், கவிதா, தேங்காய் சீனிவாசன்
மனோரமா, சுகுமாரி
மற்றும் முன்னணி நடிகர்களும் நடித்திருக்கிறார்கள்.



நடிகர் திலகத்துக்கு
அன்று ஒரு "வசந்தமாளிகை"
இன்று ஒரு "அந்தமான் காதலி"
இந்தியத் திரைப்பட வரலாற்றிலே இதுவரை இடம்பெறாத முழுக்க முழுக்க அந்தமான் தீவுகளின் அழகு கொஞ்சும் எழில்புறங்களில் அற்புதமாக உருவாக்கப்பட்ட வண்ணத் திரையோவியம்
முக்தா பிலிம்சாரின்

**அந்தமான்காதலி**
இசை: எம். எஸ். விஸ்வநாதன் (வண்ணப்படம்)


# இன்றைய பலன்

புரட்டாசி மாதம் 24-ம் திகதி
புதன்கிழமை
(10-10-1979)

**மேடம்:** அபிவிருத்தி நேரங்கள் படரும் எதிலும் தயக்கம் ஏற்படும் ஆதரவு கொடுத்தவரே முடிவிக்கையை விரிக்கக்கூடும். கடன் தொல்லை அதிகரிக்கலாம் நிதானம் வேண்டும்

**இடபம்:** இன்னலின் பின்னல் உங்கள் முன்னேற்றத்தை தடுக்கும் இடையூறும் வேதனைப்படுத்தும் திடசித்தம் இருப்பின் எதையும் சமாளிக்கலாம்.

**மிதுனம்:** இல்லம் இன்று கட்டி வெல்லம் போல் இனிக்கும் இனிய வார்த்தைகளின் மூலம் மற்றவர்களைக் கவர்ந்து செல்றவர்கள் பொருள் துறையிலும் நல்ல முன்னேற்றம் காணப்படுகிறது. சுபதினம்.

**கடகம்:** புதிய துறைகளில் ஈடுபடுபவர்கள் வியாபாரிகளுக்கு நல்ல முன்னேற்றமுண்டு. புதிய முதலீடுகளுக்குச் சிறப்பான தினம் கெலுக்கும் புதுமனை கட்டும் ஆர்வம் பிறக்கலாம். நல்ல தினம்.

**சிங்கம்:** கல்வித் துறையில் நல்ல முன்னேற்றம் காணப்படுகின்றது ஆசிரியருக்கும் புகழ் குவியும். சிலர் வாழ்க்கையில் புதிய வாகனம் ஒன்றும் கொள்வனவு செய்யப்படலாம்.

**கன்னி:** வாழ்க்கை இன்று சுவையாகச் செல்லும் எண்ணம்போல் காவும் நடக்கும். உறவினர்களின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். அரசியலிலும் பிரகாசிக்க இடமுண்டு.

**துலாம்:** சிறிய விடயம் கூட இன்று சிரமமாகத் தோன்றும். உங்கள் வீட்டிலேயே பூசல்கள் தலைதூக்கும் வாய்ப்பு. பதாச்சிதங்களைத் தவிர்த்துக் கொள்ளவும். திருப்தியற்ற தினம்.

**விருச்சிகம்:** கருத்தொருமித்த காதலர் வாழ்வில் மறக்கமுடியாத நிகழ்ச்சி இடம் பெறும் எதிர்ப்புகள் எதிலும் சாதகமான சூழ்நிலை உருவாகும். கண்ணியம் சேரும் கௌரவம் உயரும்.

**தனு:** நண்பர்களே உங்கள் முன்னேற்றத்திற்கு தடைக்கல்லாக விளைவார்கள் மோட்டைக்கடிதமொன்று சிறிது பரபரப்பை ஏற்படுத்தும். தொழில் துறையிலும் நஷ்டம் ஏற்படலாம்.

**மகரம்:** பரம் பொருளின் அருளுக்கு இடமுண்டு. பரோபகாரச்சிந்தை தலைதூக்கும். பொதுப்பணிகளில் ஈடுபடுபவர்கள் பொதுமக்களின் ஆதரவைப் பெறுவர் அந்தஸ்திலும் முன்னேற்றமுண்டு.

**கும்பம்:** திருப்திகரமான மாற்றங்களுக்கு இடமுண்டு. நுட்பமான தொழில் புரிபவர்கள் பாராட்டப்படுவார்கள். திறமையான நடவடிக்கைகளின் மூலம் பண பலத்தைத் தேடிக்கொள்வீர்கள்.

**மீனம்:** புதுமையான சம்பவங்கள் நடைபெறும், சிலருக்கு அதிஷ்டலாபங்களுக்கும் இடமுண்டு விருந்தினர் வருகை உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## சொற்போர் ...

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

அவசரகாலச் சட்ட நீடிப்பு மீதான வாக்கெடுப்பை இப்போ முடித்துக்கொண்டு, அதன் மீதான விவாதத்தை நாளை ஒத்திவைப்புப் பிரேரணையின்மீது நிகழ்த்தலாம் என்றார் பிரதமர்.

—பிரதமர் உறுதியளித்தால் அதற்கு தாம் சம்மதிப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிக்க, அவசரகாலச் சட்டம் மீதான வாக்கெடுப்பும் அந்த வாக்கெண்ணிக்கையில் நிறைவேறியது கூட்டணியுடன் சுதந்திரக் கட்சியும் எதிர்த்து வாக்களித்தது.

ஆ, பதினேந்தரை மணி நேரம் தொடர்ந்த இச்சபை அமர்வின்போது பார்வையாளர் கலரிகளிலும் சிலர் முழு நேரமும் காணப்பட்டனர்.

இலங்கை தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஜனாப் அஸீஸ் சபாநாயகர் கலரியில் இரவு வெகுநேரம் வரை காணப்பட்டார்.


வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

**ராணி** தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
(யாழ். நகர்) உதயகுமார் - சரோஜாதேவி
எரப்பா நடித்த
**யானைப்பாகன்**
(புதிய பிரதி)

**SHANTHI** JAFFNA PHONE 7642
Daily 10-30, 2-30, 4-45 7-00, & 9-30 p.m.
Audiences are standing up and applauding...
JOE DON BAKER in
"WALKING TALL" Action Packed Color Movie

**வெலிங்டன்** தினசரி 4 காட்சிகள்
(யாழ் நகர்)
சிவாஜி-வாணிஸ்ரீ
**குலமா குணமா**

**ரீகோ** போன்: 7693 ... முத்துராமன்-ஜெயசித்ரா நடித்த
**எங்கம்மா சபதம்** (புதிய பிரதி)

